# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2023 (2024)

க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை 2024 ஜனவரி மாதம் 04 ஆம் திகதி தொடங்கி 2024 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி வரையும், நடைபெறும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

இப்பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகளும் நேர அட்டவணைகளும் உரிய பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகளும் நேர அட்டவணைகளும் அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகள் உடனடியாக அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். எக்காரணத்திற்காகவும் தாமதிக்கக்கூடாது என்பதை அறியத் தருகின்றோம்.

இதுவரையும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் www.doenets.lk உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து தமது அனுமதி அட்டைகளை பதிவிறக்கம் செய்துகொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இதுவரையில் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத அல்லது அனுமதி அட்டையை தரவிறக்கம் செய்ய முடியாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தங்களால் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் நிழற்பிரதி அல்லது பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்காக அஞ்சல் அதிபரினால் உறுதிப்படுத்திப் பெற்றுக்கொண்ட கடிதத்துடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு வருகைதரல் வேண்டும்.

அதிபர்கள், தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி அட்டையில் பாடம், மொழிமூலம், பெயர் ஆகியவற்றில் திருத்தங்கள் இருப்பின்,

- **இம்முறை சகல திருத்தங்களும் நிகழ்நிலை முறைமையூடாக மேற்கொள்வதுடன் அதற்காக https://onlineexams.gov.lk/eic இணையதளத்தினுள் பிரவேசிக்க வேண்டும்.**
- **ஒரு விண்ணப்பதாரிக்கு இத்திருத்தங்களை ஒரு தடவை மாத்திரமே மேற்கொள்ள முடியும்.**
- **முறைப்படி பரீட்சித்து உறுதிசெய்யப்பட்ட பெயர் மாற்றங்கள், தேசிய ஆளடையாள அட்டை எண் திருத்தங்கள் மட்டும் தரவுத்தொகுதிகள் இற்றைப்படுத்துவதுடன் உறுதி செய்யப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.**
- **இப்பரீட்சைக்குரிய பரீட்சை நிலையங்களை மாற்றம் செய்ய முடியாது.**
- **திருத்தங்களை மேற்கொள்ளும் செயற்பாடுகள் 19.12.2023 நள்ளிரவு 12.00 மணியுடன் நிறைவடைகிறது.**

பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் இப்பரீட்சைக்குச் செல்லுபடியான ஆளடையாள அட்டையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

1. ஒரு பரீட்சார்த்திக்குப் பதிலாக வேறொருவர் தோற்றுதல், குறிப்புக்களை தம்வசம் வைத்துக்கொண்டு விடையளித்தல், மற்றைய பரீட்சார்த்திகளின் உதவியைப் பெறுதல், உதவியளித்தல், பரீட்சை மண்டபத்திலும் அதற்கு வெளியிலும் முறைகேடாக நடந்து கொள்ளல் என்பன பொதுப் பரீட்சைகள் சட்டத்துக்கமைய தண்டனைக்குரிய குற்றமாகும்.
2. இப்பரீட்சையில் கணித்தற் பொறிகள், அழிமை (Correction Fluid) என்பவற்றை உபயோகிப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. எனினும் 33,65,66,67 ஆகிய இலக்கங்களுக்குரிய பாடங்களுக்கு மாத்திரம் நிரற்படுத்தப்படாத சாதாரண கணித்தற் பொறிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
3. தற்போது ஏதாவது அரசாங்கப் பாடசாலையில் கல்வி கற்கும் ஒருவர் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்றுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.
4. பரீட்சை மண்டபத்திற்குள் கையடக்கத் தொலைபேசி, ஸ்மார்ட் கைக்கடிகாரம், இலத்திரனியல் உபகரணங்களை எடுத்துச்செல்லுதல், தம்வசம் வைத்திருத்தல், பயன்படுத்துதல் என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் அவ்வாறான விதிகளை மீறிச்செல்வோர் 1968ஆம் ஆண்டு 25ஆம் இலக்க பொதுப் பரீட்சை சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் கடுமையாக தண்டனை வழங்கப்படும்.

**விசாரணைகள் :**

| | |
|---|---|
| தொலைபேசி எண் | : 011-2784208, 2784537,2785211,2786616 |
| மின்னஞ்சல் முகவரி | : gcealexam@gmail.com |
| தொலைநகல் இலக்கம் | : 011-2784422 |
| தபால் முகவரி | : பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை, த.பெ. இல. 1503, கொழும்பு |

**பரீட்சைக் காலம் முழுவதும் 24 மணித்தியாலயங்களும் செயற்படும் அலகு இலக்கங்கள்:**
**0112785211, 0112785212, 0112784208, 0112784537, 0112786616**
**உடனடி அழைப்பு இலக்கம் 1911**

**எச்.ஜே.எம்.சீ. அமீத் ஜயசுந்தர**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்.**

**6/3/AL/2023**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பெலவத்த, பத்தரமுல்ல**

2023.12.12ஆம் திகதி